NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2008

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 80 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 10 pages.
2. Read the instruction to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers in **TAMIL**.

---

IEB Copyright © 2008

# பகுதி ஒன்று

கீழ்க்காணும் கதையைக் கவனமாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும்.

செல்வன் ஒருவன் தன் வீட்டில் ஒரு வாத்தையும், ஓர் அன்னத்தையும் வளர்த்து வந்தான். அன்னம் தன் இனிமையான குரலில் பாடும். அதைச் செல்வன் கேட்டு மகிழ்வான். ஆனால், வாத்து என்றாவது ஒருநாள் அறுத்துச் சமைப்பதற்காகவே வளர்க்கப்பட்டது.

ஒருநாள் செல்வன் வீட்டில் விருந்து ஒன்று நடக்கவிருந்தது. அதனால், அன்று அதிகாலையில் செல்வன் வாத்தைப் பிடித்து அறுக்க நினைத்தான். விடியற் காலையில் மையிருட்டாக இருந்ததால் வாத்தைப் பிடிப்பதற்குப் பதிலாகச் செல்வன் அன்னத்தைப் பிடித்துக்கொண்டான். தனக்கு ஆபத்து வந்ததை அன்னம் அறிந்துகொண்டது. தன் தலை வெட்டப்படுமுன் எப்படியாகிலும் தப்பிவிடவேண்டும் என்று நினைத்து, வழக்கம்போல் தன் இனிமையான குரலில் பாடியது. அதைக் கேட்ட செல்வன் தவறுதலாக வாத்துக்குப் பதில் அன்னத் தைப் பிடித்திருப்பதை உணர்ந்து அன்னத்தை விட்டுவிட்டு வாத்தைப் பிடித்து வெட்டினான். தக்கவேளையில் தன் இனிய குரல் தன் உயிரைக் காப்பாற்ற உதவியதை நினைத்து அன்னம் மகிழ்ச்சி அடைந்தது.

1.1 கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக.

ஒருநாள் செல்வன் 1.1.1 விருந்து ஒன்று நடக்கவிருந்தது. அதனால், அன்று அதிகாலையில் செல்வன் வாத்தைப் பிடித்து அறுக்க 1.1.2 விடியற் காலையில் மையிருட்டாக இருந்ததால் வாத்தைப் பிடிப்பதற்குப் பதிலாகச் செல்வன் அன்னத்தைப் பிடித்துக்கொண்டான். தனக்கு 1.1.3 வந்ததை அன்னம் அறிந்துகொண்டது. தன் 1.1.4 வெட்டப்படுமுன் எப்படியாகிலும் தப்பிவிடவேண்டும் என்று நினைத்து, வழக்கம்போல் தன் இனிமையான 1.1.5 பாடியது.

(5)

IEB Copyright © 2008

1.2 பின்வரும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடை தேர்ந்தெடுத்து எழுதுக.

1.2.1 செல்வன் எதைக் கேட்டு மகிழ்வான்?

(1) வாத்து பாடுவதை

(2) அன்னம் பேசுவதை

(3) அன்னம் பாடுவதை (2)

1.2.2 வாத்து எதற்காக வளர்க்கப்பட்டது?

(1) பாட்டைக் கேட்பதற்காக

(2) அறுத்துச் சமைப்பதற்காக

(3) இனிமையான குரலுக்காக (2)

1.2.3 செல்வனின் வீட்டில் என்ன நடக்கவிருந்தது?

(1) ஒரு விருந்து நடக்கவிருந்தது

(2) பாட்டுப் போட்டி நடக்கவிருந்தது

(3) விளையாட்டுப் போட்டி நடக்கவிருந்தது (2)

1.2.4 ஏன் வாத்தைப் பிடிப்பதற்குப் பதிலாக அன்னத்தைப் பிடித்தான்?

(1) வாத்து மையிருட்டாக இருந்ததால்

(2) அதிகாலையில் மையிருட்டாக இருந்ததால்

(3) அன்னம் மையைப் போல் இருந்ததால் (2)

1.2.5 அன்னம் எப்படி உயிர்தப்பியது?

(1) தன் முயற்சியால்

(2) தன் இன்முகத்தால்

(3) தன் இனிய குரலால் (2)

**[10]**

1.3 மேற்கண்ட கதையுடன் தொடர்புடைய சில வாக்கியங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் எது சரி, எது தவறு என்பதைக் கண்டுபிடித்து, 'சரி அல்லது 'தவறு' என்று எழுதுக:

1.3.1 செல்வன் வாத்தின் பாடலைக் கேட்டு மகிழ்வான். (1)

1.3.2 அவன் வாத்தைப் பிடித்து அறுக்க நினைத்தான். (1)

1.3.3 தனக்கு ஆபத்து வந்ததை அன்னம் அறிந்துகொண்டது. (1)

1.3.4 செல்வன் வாத்தைப் பிடித்திருப்பதை உணர்ந்து அதை விட்டுவிட்டான். (1)

1.3.5 அன்னம் செல்வன் தன்னை விட்டுவிட்டதால் வருந்தியது. (1)

**[5]**

1.4 கீழ்வரும் சொற்களை வரிசைப் படுத்தி, முறையான வாக்கியங்கள் எழுதுக :

1.4.1 இனிமையான தன் அன்னம் பாடும் குரலில் (2)

1.4.2 செல்வன் விருந்து ஒரு நாள் வீட்டில் நடக்க விருந்தது (2)

1.4.3 ஆபத்து வந்ததை தனக்கு அறிந்து கொண்டது அன்னம் (2)

1.4.4 அன்னத்தைப் பிடித்தான் தவறுதலாக வாத்துக்குப் பதில் (2)

1.4.5 பாடும் அன்னம் இனிமையாக வாத்துக்கு (2)

**[10]**

**30 marks**

IEB Copyright © 2008

# (B) பகுதி இரண்டு

2.1 கீழ்வரும் பத்திகளைச் சுமார் 15-20 வரிகளில் சுருக்கி எழுதுக. (10)

ரவி அவசர அவசரமாகத் தன் காலுறைகளையும் காலணிகளையும் அணிந்தான் அவனது காலுறைகள் ஈரமாக இருந்தபோதிலும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை ஈரமான காலுறைகள் அணிவது அவனுக்கு வழக்கமாகிவிட்டது அவன் தன் பந்தை எடுத்துக்கொண்டு வீட்டின் அருகில் இருந்த பூங்காவுக்குச் சென்றான் அவன் தன் நண்பர்கள் டேவிட் அசான் பாபு ஆகியோர்களுக்காகக் காத்திருந்தான்.

அரை மணி நேரம் கழித்துப் பாபுவும் அசானும் அங்கு வந்தனர் மூவரும் விளையாடத் தொடங்கினர் ஆட்டம் மும்முரமானது திடீரென்று ரவி 'ஐயோ! அம்மா!' என்று அலறிக்கொண்டே கீழே விழுந்தான் நண்பர்கள் இருவரும் அதிர்ச்சியுற்றனர் ரவி கால் வலியினால் துடிக்கிறான் என்பதை அவர்கள் உணர்ந்தனர் உடனே அவன் காலுறைகளையும் காலணிகளையும் கழற்றிப் பார்த்தனர் அவன் வலது காலில் உள்ள விரல்களுக்கிடையே சேற்றுப்புண் இருந்தது சற்றும் தாமதிக்காமல் நண்பர்கள் அவனை அவன் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

**10 marks**

# (C) பகுதி மூன்று

3.1 **இலக்கண பயிற்சி**

மயில் மிகவும் அழகான பறவை. அது எல்லாரையும கவரும் அழகிய தோற்றம் கொண்டது. மயிலின் தலையில் சிறிய கொண்டை ஒன்று உள்ளது. அதன் கழுத்து நீண்டு மெலிந்து காணப்பெறும். அதன் இறகுகள் பல வண்ணப் புள்ளிகளைக் கொண்டுள்ளன. நீண்ட கால்களைப் பெற் றுள்ள ஆண் மயிலுக்கு நீண்ட தோகை உண்டு. அதன் கால்கள் நொச்சி இலைபோல் காணப்பெறும். பெண் மயிலுக்கு நீண்ட தோகை இல்லை. மயில் தோகையைப் 'பீலி' என்றும் குறிப்பிடுவார்கள். கார்மேகத்தைக் கண்டால மயில் தன் தோகையை விசிறி போல் விரித்து ஆடும். அக்காட்சி மிகவும் அழகு வாய்ந்தது.



3.1.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு பெயர்ச்சொற்களை எழுதுக. (2)

**[3]**

3.2 **கீழ்வரும் சொற்களைச் சரியாக எழுதுக.**

**உதாரணம்: யிமல் = மயில்**

3.2.1 வைபற (1)

3.2.2 இகள்குற (1)

3.2.3 சிவிறி (1)

3.2.4 குஅழ (1)

**[4]**

IEB Copyright © 2008

3.3 **கீழ்வரும் படத்தொடரின் அடிப்படையில் வரும் கேள்விகளுக்குப் பதில் தருக.**



3.3.1 **கீழ்வரும் சொற்களை வரிசைபடுத்தி முறையான வாக்கியங்கள் எழுதுக.**

**உதாரணம்: மிகவும் பறவை மயில் அழகான = மயில் மிகவும் அழகான பறவை.**

(i) உள்ளது தலையில் சிறிய மயிலின் ஒன்று கொண்டை (2)

(ii) மயிலுக்கு ஆண் தோகை நீண்ட உண்டு (2)

(iii) பெண் மயிலுக்கு இல்லை நீண்ட தோகை (2)

(iv) மிகவும் அக்காட்சி அழகு வாய்ந்தது (2)

**[8]**

3.3.2 **எதிர்ச்சொற்களைப் பொருத்தி எழுதுக.**

**உதாரணம்: அங்கே : இங்கே**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நீண்ட | : | இது | (1) |
| (ii) | உண்டு | : | இல்லை | (1) |
| (iii) | சிறிய | : | சில | (1) |
| (iv) | அது | : | குறுகிய | (1) |
| (v) | பல | : | பெரிய | (1) |

**[5]**

3.3.3 **ஒருமைக்குப் பன்மை தருக.**

**உதாரணம்: நூல் : நூல்கள்**

(i) பறவை (1)

(ii) கிளி (1)

(iii) அன்னம் (1)

(iv) மரம் (1)

(v) மயில் (1)

**[5]**

IEB Copyright © 2008

3.3.4 **ஆண்பாலுக்குப் பெண்பால் அமைக்கவும்.**

**உதாரணம்: தாத்தா : பாட்டி**

(i) மயில் (1)

(ii) மகன் (1)

(iii) சிறுவன் (1)

(iv) அம்மா (1)

**[4]**

3.3.5 **சேர்த்து எழுதுக:**

**உதாரணம்: இதை + செய் = இதைச்செய்**

(i) இதை + பிடி (1)

(ii) பெரிய + பறவை (1)

(iii) மரம் + கிளை (1)

**[3]**

3.3.6 **பிரித்து எழுதுக:**

**உதாரணம்: அவனைப்பிடி = அவனை + பிடி**

(i) பச்சைக்கிளி (1)

(ii) கண்டுப்பிடித்தான் (1)

(iii) சேர்க்கச்சொன்னான் (1)

**[3]**

IEB Copyright © 2008 

3.3.7 **கீழ்வரும் எழுத்துகளையும் சொற்களையும் வரிசையாக எழுதுக.**

**உதாரணம்: ஆ உ எ ஒ அ = அ ஆ உ எ ஒ**

(i) இ உ ஆ ஈ அ ஏ எ ஔ (1)

(ii) ஆடு இவன் அன்னம் குடம் ஈசல் (2)

(iii) ஏணி அவர் படி பூக்கள் பாடம் பை (2)

**[5]**

**40 marks**

**Total: 80 marks**

IEB Copyright © 2008